# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : DW-1 | Date | : 19.09.2024 |
| Case No. | : **O.S. 338/2019** | Nationality | : Indian |
| Name | : உமர்ரஹமத்துல்லா | Religion | : |
| Father's/Husband's Name | : உமர்ஹத்தாப் | Age | : 63 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>பி.வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தாயார் 26.08.2009 ம் தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாயாருக்கு யார் யார் வாரிசுகள் என்றால் சம்சுநிஷா, ஹபீப்முகமது, ரஹமத்துல்லா, உமல்பஜ்ரியா, மும்தாஜ்பேகம், ஆசியாமரியம் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். அதில் சம்சுநிஷா இறந்துவிட்டார். நான் எனது மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ள சொத்து மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுக்காவிற்கு உட்பட்ட மேலையூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். மூன்று சொத்துகளும் அங்கு தான் உள்ளது. அந்த மூன்று சொத்துகளின் சர்வே எண்கள் என்னவென்றால் சர்வே எண் 89/1 ல் கண்ட 17 செண்ட் விஸ்தீரமுள்ள நஞ்சை. புல எண் 157/7 ல் 49 செண்ட் விஸ்தீரமுள்ள நஞ்சை, புல எண் 154/15 ல் 117 செண்ட் விஸ்தீரமுள்ள நஞ்சை ஆகும். மேற்படி மூன்று சொத்துகளும் எனது தகப்பனாரால் 1956 ம் ஆண்டு வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

2. 21.02.1977 ம் தேதி நாகன் என்பவர் எனது தாயாருக்கு குத்தகை சாகுபடி பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 09.10.1977 ம் தேதி குத்தகை சாகுபடி பத்திரம்

எழுதிக் கொடுத்துள்ளார். அது ஆவண எண்.1327/1977 என குத்தாலம் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நாகன் பெயரில் ஏற்பட்டிருந்த குத்தகை சாகுபடி பதிவேடுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த காலகட்டத்தில் எனது தகப்பனார் உயிருடன் இல்லை என்பதால்தான் எனது தாயாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தினை ONGC நில எடுப்பு செய்ததிலிருந்து 06.12.1999 ம் தேதியிலிருந்து அதற்கான வாடகையை நான்தான் பெற்று வருகிறேன் என்றால் 06.12.1999 ம் தேதி ஒப்பந்தம் ஏற்பட்டது. 07.12.2000 ம் தேதியிலிருந்து வாடகையை நான் பெற்று வருகிறேன். மேற்படி ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. எனது தாயார் எனக்கு எழுதிக் கொடுத்துள்ள ஹிபா ஆவணத்தை பொதுவெளியில் எந்த தேதியில் பிரகடனப்படுத்தினேன் என்றால் பொதுவெளியில் பிரகடனப்படுத்த வேண்டிய அவசியமில்லை. வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். இஸ்லாமியர் தனிநபர் சட்டப்படியும் ஹிபா எழுதும் வழக்கப்படியும் ஹிபா எழுதிக் கொடுப்பவரும் அதனை பெறுபவரும் அதனை பொதுவெளியில் பிரகடனப்படுத்தினால்தான் அது செல்லுபடியாகும் என்றால் சரியல்ல. ஒரு ஆவணம் அனைவருக்கும் தெரிந்தால்தான் சொத்துரிமை யார் பெயரில் உள்ளது என்பதும் அனைவருக்கும் தெரிய வரும் என்றாலும் ஆவணத்தை ரகசியமாக வைத்திருந்தால் அது செல்லக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல. எனது தாயார் எனக்கு எழுதிக் கொடுத்த ஹிபா ஆவணத்தில் எனது குடும்ப உறுப்பினர்கள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஹிபா ஆவணத்தில் என்ன காரணத்திற்காக எழுதிக் கொடுக்கப்பட்டது என்று எனது தாயார் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தன்னுடைய பராமரிப்பிற்காக எழுதிக் கொடுத்துள்ளார். ஹிபா எழுதிக் கொடுப்பவர் எந்த முஸ்லிம் ஜமாத்தை சேர்ந்தவரோ அந்த ஜமாத்தார்கள் முன்னிலையில்

அவர்களை சாட்சியாக வைத்து எழுதிக் கொடுத்தால்தான் செல்லுபடியாகும் என்றால் சரியல்ல.

4. எனது தாயார் எனக்கு எழுதிக் கொடுத்துள்ள ஹிபா ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஹிபா ஆவணம் கொடையாக கொடுக்கப்பட்டுள்ளது என்பதால் அதை செட்டில்மெண்ட் ஆவணமாக எழுத முடியாது என்றால் சரியல்ல. மேற்படி ஹிபா ஆவணம் தயார் செய்யப்பட்டது என்பதால்தான் அதனை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சார்பதிவாளர் பதிவு செய்யமுடியாது என்று கூறியதால் பதிவு செய்யவில்லை. ஹிபா ஆவணத்தில் செட்டில்மெண்ட் என்ற வார்த்தை இருந்ததால் அதனை பதிவு செய்ய வேண்டும் என்றாலும் நாங்கள் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் எனது மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுப்பதற்கு 20 நாட்களுக்கு முன்பாகதான் எனது தாயார் இறந்தார் என்றால் சரியல்ல. எனது தாயார் 2009 ம் ஆண்டு இறந்தார். செட்டில்மெண்ட் 2015 ம் ஆண்டு எழுதிக் கொடுக்கப்பட்டது.

5. எனது தாயார் இறக்கும் வரையில் எனது சகோதரிகள் வீட்டில் இருந்தார் என்றாலும் அவர் இறந்த பிறகுதான் எனது வீட்டிற்கு கொண்டுவரப்பட்டார் என்றாலும் சரியல்ல. எனது தாயார் 25 வருடங்களாக என்னுடன்தான் இருந்தார். எனக்கு இருதய நோய் பிரச்சனை காரணமாக இறப்பதற்கு 6 மாதங்களுக்கு முன்பு எனது சகோதரி உமல்பஜ்ரியா வீட்டில் இருந்தார். உமல்பஜ்ரியாவை விசாரித்தால் எனது தாயார் அவரது வீட்டில் எவ்வளவு காலம் இருந்தார் என்பது தெரிய வரும் என்றால் சரிதான். 2010 ம் ஆண்டிலிருந்து எனக்கு இருதய நோய் பாதிப்பு இருப்பதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2010 ம் ஆண்டிலிருந்து தற்போது வரை நான் சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் சொந்தமானது என்றால் சரியல்ல. மேற்படி ஹிபா

ஆவணம் போலியான ஆவணம் என்றாலும் அதனால்தான் அந்த வழக்கு தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பதிவு செய்யப்படாத ஹிபா ஆவணத்தின் மூலமாக குத்தாலம் சார்பதிவகத்தில் செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்ய மறுக்கப்பட்டது என்பதால்தான் திருவிடைமருதூர் சொத்தினையும் சேர்த்து திருவிடைமருதூர் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் அங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

6. அவ்வாறு பதிவு செய்வதற்கு நான் முன் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. 09.05.2017 ம் தேதி வாதி என்னை சந்தித்து தாவா சொத்தை பாகம் பிரித்து கேட்டார் என்றாலும் நான் மறுத்ததால்தான் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. வாதி அவ்வாறு கேட்கவும் இல்லை நான் மறுக்கவும் இல்லை.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/-N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.